உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்
S.C No.446/2021

பெயர் :ராம்நாராயணன்(அ.சா.10)
தகப்பனார் பெயர் :பழனிமுத்து
கணவர் பெயர் :
வயது :53
கிராமம் :
வட்டம் :
தொழில் :காவல்ஆய்வாளர் நரிக்குடி, விருதுநகர் மாவட்டம், தற்போது பணியிடைநீக்கம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

08.10.2025

முதல் விசாரணை:

நான் கடந்த 2017ம் வருடம் மேலூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, 13.07.2017ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.சிவபாலன் என்பவரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மேலூர் காவல்நிலைய குற்ற எண்.740/2017 பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 307 இ.த.ச வாக பதிவு செய்த வழக்கினை 14.07.2017ம் தேதி இரவு 12.15 மணிக்கு எனது புலன்விசாரணைக்கு எடுத்து கொண்டேன். பின்பு அன்று காலை 5.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் முருகேசன், செல்வம், ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.14 மற்றும் அ.சா.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் மலைச்சாமி, தவமணி, மலைச்செல்வி, அடக்கி, மலைசுந்தரம், முருகேசன், செல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு சிவகங்கை ரோடு, ஜெய்ஹிந்த் தியேட்டர்அருகே வைத்து இவ்வழக்கின் எதிரிகள் திருவாசகம், நம்பி என்ற சந்திரன் ஆகியோர்களை கைது செய்தேன். பின்பு வழக்கின் எதிரி திருவாசகம் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சித்ரான், பதினெட்டான் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலமானது

அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரி நம்பி என்ற சந்திரன் 10.15 மணிக்கு தானாக முன்வந்து மேற்படி சாட்சிகள் சித்ரா, பதினெட்டான் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி திருவாசகம் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆட்டோவை ஆஜர் செய்வதாக கூறியதன் பெயரில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் TN59 AS 1427 என்ற PIAGGIO பயணிகள் ஏற்றிகொண்டு செல்லும் ஆட்டோவை அத்தாட்சியில் நண்பகல் 12.00 மணியளவில் கைப்பற்றினேன். மேற்படி PIAGGIO பயணிகள் ஏற்றிகொண்டு செல்லும் ஆட்டோ புகைப்படமானது அ.சா.ஆ.18ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரி திருவாசகம் 13.00 மணிக்கு வடக்கு நாவினிப்பட்டியில் உள்ள அவரது வீட்டின் பின்புறம் வைத்து வாதியை தாக்கிய அரிவாள் ஒன்று, ரத்தம் பட்ட சட்டை ஒன்று எடுத்து கொடுத்தார். அதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன்.மேற்படி சான்றுபொருட்களானது அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அத்தாட்சிகளானது 3 எண்ணம் அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அன்றைய தினம் 14.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரி நம்பி என்ற சந்திரன் நாவினிபபட்டி பள்ளிவாசல் தெருவில் உள்ள அவரது வீட்டின் பின்புறம் வாதியை தாக்குவதற்காக பயன்படுத்திய கத்தி ஒன்றை ஆஜர் செய்தார். மேற்படி கத்தியானது அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேற்படி அத்தாட்சிகளானது 3 எண்ணம் அ.சா.ஆ.19 ஆக ஏற்பனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 15.00 மணிக்கு எதிரிகளின் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 18.07.2017ம் தேதி இவ்வழக்கின் 5ம் எதிரி ராமன்பாபுவை சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர்,

அப்போலா பார்மஸி முன்பு வைத்து 13.20 மணிக்கு கைது செய்து 14.30 மணிக்கு நிலையம் வந்து, பின்பு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலமானது அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அன்றைய தினம் 16.15 மணிக்கு நாவினிப்பட்டி ஆண்டுரெணிகுளம் அருகே உள்ள முட்புதரில் எதிரிகள் புகார்தாரரை தாக்குவதற்காக பயன்படுத்திய மூங்கில் கட்டை ஒன்றை ஆஜர் செய்தார். அதை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேற்படி மூங்கில் கட்டையானது அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 17.15 மணிக்கு எதிரிகளின் சொத்துடன் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு சாட்சிகள் சித்ரா, பதினெட்டான் என்பவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.08.2017ம் தேதி இவ்வழக்கின்எ திரிகள் மணிவாசகம், ராஜதிலகம் உயர்நீதிமன்ற மதுரைகிளையில் முன்ஜாமின் பெற்ற விபரம் தெரிந்து கொண்டேன். பின்பு 10.09.2017ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திருமலைச்சாமி, ஆனந்தக்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தார்கள். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் சிவபாலன், சார்பு ஆய்வாளர் அருண்பாண்டியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பணிமாறுதல் காரணமாக வழக்கு கோப்பை ஆய்வாளர் திரு.சார்லஸ் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் தான் ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகளிடம் இருந்து பதிவு செய்தேன். அதை படித்து பார்த்து தான் பதிவு செய்தேன். திருவாசகம், மற்றும் நம்பி 1,2 எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலமானது சம்பவமானது

2016ம் ஆண்டு நடந்ததாக பதிவு செய்யப்பட்டு சொல்லப்பட்டிருக்கிறது என்றால் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. நான் ஒப்புதல் வாக்குமூலத்தை தயாரிக்கவில்லை என்றும் நான் படித்து பார்க்காமல் கையெழுத்திட்டதால் தான் குற்றஎண் தவறாக 2016 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த சம்பமும் நடக்கவில்லை என்றும், நான் சொன்னது போல் எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடதத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும் எதிரிகளிடம் இருந்து எவ்விதமான சான்று பொருட்களும் பதிவு செய்யப்படவில்லை என்றும்,பின்னிட்டு ஆவணங்களையும் சான்றுபொருட்களையும் எங்கள் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.10.08 18:18:05 +0530

Assistant Sessions Judge

Melur